MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41

ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ரு. பிரவஹூ மாசிமீ பகுதி உ.
Vol 5. *February & March 1928.* No. 2.

அரிதாசர்.

இப்பெரியார், இருசமய விளக்கம் என்ற நூலின் ஆசிரியர் என்பது பலரும் அறிவர். இந்நூல் சைவவைணவவாதங்களை, ஆகமவல்லி ஆரணவல்லி என்ற பெண்களிருவர் கூற்றில் வைத்து விளக்கி; முடிவில் திருமாலே பரதத்துவம் என்பதை நிலைநாட்டி நிற்பதாம். இது 4 காண்டங்களும், 26 படலங்களும் 130 பரிச்சேதங்களும் 2119 பாடல்களும் உடையது. அரிதாசர் வேதபுரி என்ற ஊரில் திருக்கோயில் கொண்டருளிய திருமாலின் ஆணைப்படி இந்நூலை இயற்றி, அப்பெருமான் சந்நிதியிலே இதனை அரங்கேற்றிப் பல அற்புதச் செயல்களையும் நிகழ்த்தினர் என்பது இந்நூலிறுதியில் உள்ள சம்மதபரிச்சேதத்தால் அறியப்படும். இவ்வேதபுரி, அரிவாசபுரம், அரிதை என்றும் வழங்கப்பட்டதென்றும், இதனையடுத்த மலையும் ஆறும் வனமும் முறையே வேதகிரி, வேதநதி, வேதவனம் எனப் பெயர் பெறும் என்றும்—

"மருவார் துளவத் தொடைமாலொரு மச்ச மாகிப்
பெருவா ரிதியிற் புகுசோமுகன் பேரை மாய்வித்
தருவா கியமா மறையைக்கம லோத யற்குத்
திருவாய் மலர்ந்தா னுருசீதளச் செய்ய குன்றில்" (நகரப்படலம்,1)

"விரியுந் தடங்குன் றதுநான்முதன் மின்னு வேத
கிரியென் றதன்பேர் கிடைக்கின்றது கீழ்வி வந்த

புரியுஞ் சுரமும் புனலாறமப் புண்ணி யப்பேர்
தெரியும் படியே நிகழ்கின்றவித் தேய மெங்கும்" (ஷி, 2)

என்று அரிதாசரே காரணங்காட்டி விளக்குதல் காண்க. இந்நூலாசிரியர் களப்பாளர் என்ற குடியில் உதித்தவர் என்பதும், தம்மூர்த் திருமால் கோயிற்குப் பல திருப்பணிகளுஞ் செய்து புதுப்பித்து வேண்டிய கைங்கரியங்களைப் புரிந்தவர் என்பதும்—

"வளப்பார் புகழும் படிவாழுமிம் மாந கர்க்கண்
பிளப்பா வொருதா ணினில்வந்து பிறந்துளானுக்
குளப்பா வனைகூ ரரிதாதனென் றோது நாமக்
களப்பாளன் தானத் தளங்கள்கறை கண்ட நாளில்" (ஷி, 6)

என்ற செய்யுளால் தெரிகின்றன. களப்பாளர் என்பார் முற்கால முதலே தமிழ்நாட்டில் அரசுரிமை வகித்துவந்த கூட்டத்தார் ஆவர். அச்சுத களப்பாளன் என்பான், மூவேந்தரையும் ஒருகாலத்து அடக்கியாண்டவன் என்பது தமிழ்நாவலர்சரிதையால் தெரியவருகின்றது. ஒட்டக்கூத்தர் புலவர்களைக் கொலைபுரிவித்து வந்தபோது, "கோக்கண்டு மன்னர் குரை கடற் புக்கிலர்" என்ற செய்யுள் கூறி அவரைத்தடுத்த நெற்குன்றவாண முதலியார் என்பவர் இக்களப்பாள வகுப்பினரென்பது, அவரிபற்றிய புலியூரந்தாதியிறுதிச் செய்யுளால் அறியலாம். 1 நெற்குன்றம் என்பது தொண்டைநாட்டத்தோர் ஊர். சைவசந்தானாசாரியத்தலைவரான மெய்கண்டதேவருடைய தந்தையாருக்கும் அச்சுதகளப்பாளர் என்பதே பெயராதலின் அவரும் அம்மரபினரென்பதில் தடையில்லை. "களப்பாளராஜர்" எனவும் சாஸனம் இன்னோரைக் கூறும் 2. இதற்கேற்ப இக்குலத்தவரான அரிதாசரை—

"விரிதாதணியுந் தொடைமேவிய வேந்தனான அரிதாசன்"

என இருசமய விளக்கப் பாயிரங் கூறுதல், இவர் வேந்தர் குலத்தவர் என்பதை விளக்குதல் காண்க.

---

1. ["களப்பாள னேற்குன்ற வாணனந்தாதிக் கலித்துறையே" என்பது அவ்விறுதியடி.]

2. [T. A. S. Vol. ii, p. 7 fn.]

இனி, இவ்வரிதாசர் நான்முகப்பில் தம்மூர்த் திருமாலின் வணக்கங் கூறுமிடத்து—

"கிரிபோல் விளங்கிக் கிளரும்புயக் கிட்டணராயர்
தரைமீது சிங்காத் திரியிற் சயத் தம்ப நாட்ட
வரமா தரவா வளித்தேவட கூவ மேவுங்
கருமா மணிவண் ணனைநீடு கருத்துள் வைப்பாம்"

என்று பாடுகின்றார். இதனுள், கிருஷ்ணராயர் சிங்காத்திரி என்றவிடத்து ஜயஸ்தம்பம் நாட்டுவதற்கு வடகூவத்திற் கோயில் கொண்ட திருமால் வரமளித்தருளியவர் என்று கூறப்பட்டுள்ளது. இங்கே கூறப்பட்ட கிருஷ்ணராயர் யாவர்? இவர் ஜயஸ்தம்பம் நாட்டிய வரலாறு யாது? என்பவற்றைப் பற்றிக்கூறுவேன்.

பாதகண்டத்தின் தென்பகுதியை நீதி நெறி தவறாது ஆட்சி புரிந்து, அதன் சநாதன தர்மங்களும் கோயில் முதலிய அறப்புறங்களும் பரசமயிகளாற் கேடுவராதபடி பலதலைமுறைகளாகப் பாதுகாத்து வந்தவர் விஜயநகர வேந்தர் என்பதும், அவருள் தலைசிறந்து விளங்கிய பெருந்தகையார் கிருஷ்ணதேவராயர் என்பதும், பிரசித்தமானவை. இவ்வரசர் கி.பி. 1497 முதல் 1540 வரை ஆட்சி புரிந்தவர். கலிங்கதேசத்தைக் கடகம் (Cuttak) என்ற தலைநகரிலிருந்து ஆண்டுவந்த கஜபதியரசனை பிரதாபருத்ரன் என்பான் (1497—1540) தமக்கு அடங்காதிருந்ததனால், இக்கிருஷ்ணதேவர் உத்தேசம் 1520-ல் அவனாட்டின்மேற் படையெடுத்துச்சென்று போரில் அவனை வென்றனர் என்பது அவர் சரித்திரவிசேடங்களுள் ஒன்று.

சிங்காத்திரி என்பது விசாகபட்டணத்துக்கு வடமேற்கே 4-மைலில் உள்ள சிம்மாசலம் என்ற திருப்பதியாகும். இவ்வூரில் நாட்டப்பட்டதாக அரிதாசர் கூறும் ஜயஸ்தம்பம், மேலே கூறிப் போந்த கலிங்கவரசனுடன் இவ்வரசர் நடத்திய போரின் வெற்றிக் குறியேயாம். இவ்விராயர்பெருமானே பாடிய ஆமுக்தமால்யதாவிலும், இவரது ஆஸ்தான கவியாகிய அல்லஸானிபெத்தன்னர் பாடிய மனுசரிதம்என்ற தெலுங்கு காவியத்திலும் இந்த சிம்மாசல ஜயஸ்தம்பத்தைப்பற்றிக் கூறப்பட்டுள்ளன என்பர். சிம்மாத்திரியில் அத்தம்பம் நாட்டப்பட்டதாக அரிதாசர் முதலியோர் கூறி

னும், அது போட்டூர் என்ற விடத்துத் தாபிக்கப்பட்டதாகவே தெரியவருகின்றது. இச்செய்தி—

“இந்த கோபுரம் ராஜாதிராஜன் ராஜபரமேசுவரன் ஸ்ரீ வீரப்பிரதாப கிருஷ்ண தேவமஹாராயரின் தர்மம் ஆக ஸிம்மாத்ரி போட்டூர்க்கு எழுந்தருளி ஜயஸ்தம்பம் நாட்டித் திரும்பிப் பொன்னம்பலநாதனையும் ஸேவித்து வடக்குக் கோபுரம் கட்டிவைத்த ஸேவை” என்னும் சிதம்பர சாஸனத்தாலும், (S. I. I. Vol. iv No. 199, p. 622)

“சிம்மாசலத்துத் திருமாலுடைய பிரமோற்சவத்தைச் சேவிக்கவரும் தேவர்கள், போட்டூர் என்ற ஊரில் கிருஷ்ண தேவராயர் நாட்டிய ஜயஸ்தம்பத்தின் மேல் வரைந்துள்ள சாஸனம் இன்னதென்பதைப் பார்க்க வந்து, அதனெழுத்துக்கள் தெளிவாயில்லாமையால் கலிங்க (ராசஞன பிரதாபருத்ர)னுடைய அபகீர்த்தியாகிய மையைத் தடவி வாசிப்பாராயினர்” (மனுசரிதம்).

என்றபொருளில் அல்லாசனிபெத்தன்னர் என்ற ஆந்திரமகா கவியாடிய பத்யங்களாலும் விளக்கமாம். ஆகவே, பொட்டுநூர் என்பது சிம்மாசலத்தின் அடிவாரத்தில் உள்ளது என்பதும், அதுபற்றிச் சிம்மாத்திரிப் பொட்டுநூர் என வழங்கப்படுவதென்பதும் விளங்கும். இப்போதும் அப்பெயருடன் அவ்வூர் உள்ளதேயாம். இதனால் சிம்மாசலத்துக்கு 30-மைல் தூரத்துள்ள வேறு பொட்டு நூரொன்றை ஜயஸ்தம்பம் நாட்டிய இடமாகச் சரித்திரவறிஞர் கருதி எழுதியது தவறுதல் காண்க. சிம்மாத்திரித் திருமாலிடம் கிருஷ்ணதேவர் பெரும்பக்தி பூண்டிருந்தவர் என்பது, 1516, 1522-ஆம் ஆண்டுகளில், பலகிராமங்களும் திருவாபரணங்களும் அப்பெருமானுக்கு அவரளித்தனர் என்று சிம்மாசல சாஸனங்கள் பல கூறுதலால் தெளிவாகின்றது.

இவ்வாறு, சிம்மாத்திரிப் பொட்டுநூரில் நாட்டப்பட்ட ஜயஸ்தம்பமே அரிதாசராலும் கூறப்பட்டதென்க. இத்தகைய செயத்தம்பம் நிறுத்தும்படி அவ்விராயர்பெருந்தகைக்கு வரமளித்தருளியவர் “வடகூவமேவும் கருமாமணி வண்ணன்” என்று அவ்வாசிரியர் கூறுகின்றார். வடகூவம் என்பது, மேற்கூறிய வேதபுரியின் பக்கத்தோடுவதாக முன்கூறிய வேதநதிக்கு அக்காலத்து

வழங்கிய பெயராகவே தெரிகின்றது. இதனால் கிருஷ்ணதேவர் கலிங்க வெற்றிக்கு முன் இவ்வடகூவக்கரையிற் கோயில்கொண்டுள்ள திருமாலின் அநுக்ரஹம் பெற்றுக்கொண்டு அப்போர்க்குச் சென்று அதனில் சித்திபெற்றவர் என்பது பெறப்படுகின்றது. எனவே, அரிதாசர் தம்காலத்தவரான அரசர் செய்தியே கூறினராவர். தம் காலத்துக்குமுன் நிகழ்ந்த கலிங்கவெற்றி தம்மூர்த் திருமாலருளால் அரசரொருவர்க்குக் கிடைத்தது என்று, அப்பெருமான் அடியார்க்கருளுஞ் சிறப்புக்கு இப்புலவர் ஓர் ஐதிகம் காட்டினர் என்று கொள்ளுதல் கூடாதோ எனின், யான் இவ்விஷயமாகப் புதியவாய்க் கண்ட அரியசெய்தி சிலவற்றால், அவ்வாசங்கைக்கு இடமேயில்லையாகின்றது. அதனை இனி விளக்குவேன்.

தொண்டைமண்டலத்தே திருவெவ்வுளுருக்கு (திருவள்ளுருக்கு) வடக்கே 18-மைலிலும் ஆரணி என்ற ஊர்க்குக் கிழக்கே 10-மைலிலும் நாகலாபுரம் என்ற ஊரொன்று உள்ளது. இதனை 'நகரிநாகலாபுரம்' என்று இக்காலத்தார் வழங்குவர். இவ்வூரில் மலையும் அம்மலைபக்கத்தே நதியும் திருமால் கோயிலும் உள்ளன. இத்திருமாலின் திருநாமமாக இப்போது வழங்குவது, வேதநாராயணப் பெருமாள் என்பது. இக்கோயிலில் உள்ள சாஸனங்கள்; அவ்விலாகாத் தலைவரால் பிரதிபெடுக்கப்பட்டுள்ளன. விஜயநகர வேந்தரான கிருஷ்ணதேவர் சகவருஷம் 1445 (கி. பி. 1523)-ல் இக்கோயிற்குப் பூதானமளித்துள்ள செய்திகளை அச்சாஸனங்கள் கூறுகின்றன. அச்செய்திகளுள், மிகவும் அருமையானவை அவ்வேந்தர் பெருமான் வடநாட்டில் அடைந்த பெருவெற்றிக்குப்பின், மகாமகத்தின்பொருட்டுக் கும்பகோணஞ் சென்றுவந்தன ரென்றும், அவ்வாறு சென்றுவரும் இடையில் நாகலாபுரத்துக்கு விஜயஞ்செய்தனர் என்றும், அப்போது அவ்வூரெம்பெருமான் தம் கனவில்தோன்றி ஆணையிட்டருளியபடி ஹரிதாசர் என்ற பெரியாரால் ஆங்குக் திருமால்கோயில் கட்டிமுடிக்கப்பட்டதென்றும் அக்கோயிலின் வடகோபுரவாயிலிற் கண்ட சாஸனமும்,[1] நீலமாணிக்கதேவர் கோயிற் கைங்கரியஙகள் நடத்துவதற்கும், ஆங்குத் திராவிட வேத

[1. Ep. Rep 628 of 1904.]

மும் (நாலாயிர திவ்யபிரபந்தம்) வேதாந்தமும் (ஸ்ரீபாஷ்யாதிகளும்) ஓதுவதற்கும் பலகிராமங்களை அவ்வரசர் அளித்ததோடு, பெரியாரான ஹரிதாசர்க்கும் பல ஊர்களைத் தானமளித்து, அப்பெரியாரிடமே அக்கோயிலதிகாரம் முழுமையும் ஒப்பித்தனர் என்று இரண்டாங் கோபுரத்தும் வெளிப்பிராகாரத்தின் கிழக்குத் திருமதிலினும்கண்ட சாஸனங்களும் 2 கூறுகின்றன என்பதேயாம். இவற்றால் ஷெ சாஸனங்களிற் கூறப்படும் பெரியார், கிருஷ்ணதேவரைத் தம் நூலுட்பாடிய அரிதாசரின் வேறல்லர் என்பது நமக்குக் கரதலாமலகமாக விளங்குவதன்றோ? அச்சாஸனங்கள் கண்டவாறே, இருசமயவிளக்கமுடையார் திருமாலேவலால் வேதபுரிக்கோயில் திருப்பணிகள் பலவும் செய்து முடித்தவர் என்பது—

"அரிதாதன் நினைந்தவெலா முடித்தாண்டகோவை" (பாயிரம், 6.)
"அரிதாத னென்றோது நாமக்
களப்பாளன் தானத்தளங்கள் கரைகண்ட நாளில்" (நகரப். 6)

என்ற அவர் பாடல்களால் புலப்படும். மச்சாவதாரமூர்த்தியாய் வேதங்களை சோமுகாசுரனிடமிருந்து மீட்டருளியதுபற்றி, நகர்புரத்திருமால் வேதநாராயணன் என்றும், அவ்வூரும் மலையும் ஆறும் முறையே வேதபுரி, வேதகிரி, வேதநதி என்றும் வேதசம்பந்தமுடைய பெயர்களைப் பெறலாயின என்க. (நகரப்படலம், 1.) இவற்றுள் நதி வடகூவம் எனப்பட்டதோடு, ஆரணி என்றும் அரிதாசர் காலத்துப் பேர்பெற்றிருந்ததென்பது—

"வான நதிநே ராரணியின் வடதீரத்து வேதபுரித்
தானநின்ற கருமணியந் தாமப்பெருமான் சந்நிதியில்"
(சம்மதபரிச். 33)

என்று இவ்வாசிரியர் பாடுதலால் தெரியலாம். ஆரணி என்பதும் ஆரணசம்பந்தம்பற்றி வழங்கியதேயாகும். திருமாலின் திருநாமம் நீலமாணிக்கதேவர் என்று சாஸனங்கூறுமாறே, அரிதாசர் தம்மூர்த்திருமாலை "கருமாமணி வண்ணன்" "கருமணியந் தாமப்பெருமான்" என்று பலவிடத்துங் கூறுதல் ஒப்பிடத்தக்கது. கலிங்க வெற்றிக்கு முன்பே, கி. பி. 1514-ல் கிருஷ்ணதேவர் ஷெ கோயி

[2. Ibid. 627, 628 of 1904; C. P. No. 12 of 1905.]

விற் சாஸனங்கள் அமைத்திருத்தலானும், அவர் தாயாரான நாகலா தேவியின் பெயரால் நாகலாபுரம் என்ற பெயரை அவ்வூர் பெற்றிருத்தலானும், அக்கலிங்கப் போர்க்குப் பல வாண்டுகட்கு முன்பே அவ்வரசரது அபிமானம் இவ்வூரின்கண் மிக்கிருந்தது என்பது தெரியலாம். இந்நாகலாபுரத்துக்கு அரகண்டபுரம் என்ற வேறு பெயரொன்றும் வழங்கியதாகச் சாஸனத்தால் அறியப்படுகின்றது.

இவற்ருல், அரிதாசர் என்ற ஆசிரியர் வாழ்ந்த வேதபுரி என்பது நகரிநாகலாபுரமே என்பதும், இவர் வடமொழி தென்மொழிகளில் வல்லவராகவும் வேத வேதாங்கங்களைக் கரைகண்டவராகவும் திருமாற்குப் பல திருப்பணிகளும் புரிந்து அப்பெருமான் திருவருள்பெற்ற பெரியாராகவும் விளங்கினர் என்பதும், இவரது அருமை பெருமைகளை அறிந்து விஜயநகர வேந்தர்பெருமானுன கிருஷ்ணதேவராயர் அவரைப் பெரிதும் கௌரவித்தவர் என்பதும் திருமாலின் பேரருள்பெற்றிருந்த இவர்வாயிலாகத் தாம் அடையப்போகும் வெற்றியை முன்னறிந்து கலிங்கப்போரை அவ்வரசர் நடத்திச் சித்திபெற்றனர் என்பதும், அதனுல் அப்பெரியார் திருப்பணி புரிந்த திருமால் கோயிலுக்கும் அவர்க்கும் இராயர்பெருமான் பல கிராமங்கள் தானமளித்துப் பெரிதும் சிறப்பித்தனர் என்பதும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

கிருஷ்ணதேவராயர் தென்னுட்டு ஸ்ரீவைஷ்ண சமயத்தைத் தழுவியவர். ஆயின் அதுபற்றிப் பிறவைதிக சமயக்கடவுளை வணங்காத விரதம் பூண்டிருந்தவரல்ல ராதலின் அக்கடவுளர்க்கெல்லாம் நாடெங்கும் பல திருப்பணிகள் நடத்தியுள்ளார். ஆயினும் இவரது அபிமானம் வைணவத்தில் மிகவிருந்ததென்பதற்கு சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் திவ்பசரிதங்களை ஆந்திரத்தில் அழகாக அமைத்து இவர் பாடிய 'ஆமுக்தமால்யதா' என்ற அரிய காவியமே சிறந்த சான்ருகும். "சூடிக்கொடுத்த மாலையினுள்" என்பது இக்காவியப் பெயரின் பொருளாம். இதனுள், ஆழ்வார்களுடையவும், ஸ்ரீவைஷ்ணவ பரமாசாரியர்களான, ஆளவந்தார், உடையவர், வேதாந்ததேசிகன், மணவாளமாமுனிகள், முதலிய பெரியார்களுடையவும் அவதாரமகிமைகள் மிகவழகாக இவராற் கூறப்பட்டுள்ளன. ஆண்டாள்

பாசுரங்களின் கருத்துக்களையெல்லாம் இவ்வரசர்பெருமான் தம் நூலுள் விளக்கியுள்ள மாதிரிகையால், சம்பிரதாயகிரந்தங்களில் சிறந்த பயிற்சியுடையவர் இவர் என்பது விளங்குகின்றது என்பர். ஆகவே, தமிழ்நாடு முழுமைக்கும் உரிய தனியரசராகவும், தென்னாட்டு வைஷ்ணவ மதத்தவராகவும் விளங்கிய இவர் தமிழ்ப் பாஷையை அறிந்தவராயிருத்தலும், தமிழ்நாட்டுப் பெரியார்களையும் புலவர்களையும் அபிமானித்திருத்தலும் கூடியனவேயாம். திராவிடவேதம் ஓதுவதற்கென்று இவர் பூதானம் அளித்திருத்தலாலும், இவர்க்கு அத் திவ்யப்பிரபந்தங்களில் இருந்த பற்றுமிகுதி புலனாம். இவ்வரசரது மந்திரிகளுள், தொண்டைநாட்டுச் செம்பூரினரான அம்பி (Hampi) அறம்வளர்த்தமுதலியார் என்பாரும் ஒருவராயிருந்த செய்தியும், ஞானப்பிரகாசர், தத்துவப்பிரகாசர், மண்டல புருடர், குமாரசரசுவதி என்ற தமிழ்ப்புலவர்களால் இவர் பாடல் பெற்றுள்ள செய்தியும் தமிழ்நாவலர்சரிதை முதலியவற்றால் தெரிகின்றன. இப்புலவர்களுள் குமாரசரசுவதி என்பார், அரிதாசரைப் போலவே, கலிங்க வெற்றியில் கிருஷ்ணதேவர் பெற்ற மற்றொரு விசேடச்செய்தியைப் பாடியிருத்தல் இங்கு அறியத்தகும். மேலே நான் கூறியபடி, இவ்விராயர்பெருமான் கலிங்கவரசனை வென்று சயமகளைக் கைப்பற்றியதோடு, அக்கஜபதியின் அருமைப் பெண்ணும், அழகு குணமுதலியவற்றாற் சிறந்தவளுமான துர்க்காதேவி என்ற குலமகளையும் மணந்து கொண்டனர் என்பது அவரது பிரபல வரலாறும். இச்செய்தி நிகழ்ந்தகாலத்தே, இக்குமாரசரசுவதியும் உடனிருந்து அவ்வேந்தர்பெருமானது அத்திருமணத்தைச் சிறப்பித்துள்ளார். அவ்விவாக காலத்தே இப்புலவர் பாடிய அழகிய வெண்பா அடியில் வருமாறு:—

"கலிங்க மிழந்து நுதிக் கைச்சங்கந் தோற்று
மெலிந்துகட கந்நழுவ விட்டான்—மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மானகிருஷ்ண பூபாலா வுன்றனக்குப்
பின்னிட்ட வொட்டியன்போற் பெண்" என்பதே.

இப்பாட்டில் 'உனக்குப் போரிற் பின்னிட்டுக் கலிங்கம், நுதிக் கைச் சங்கம், கடகம் என்பவற்றை இழந்த ஒட்டியனை (கலிங்கவா

சனை) ப்போலவே, அவன் பெண்ணும் அம்மூன்றனையும் நெகிழவிட்டாள்' என்று சிலேடை நயம்பெறப்புலவர் பாடுகின்றார். ஒட்டியன் கலிங்கத்தையும் (கலிங்கதேசத்தையும்) நுதிக்கைச் சங்கத்தையும் (துதிக்கையுடைய யானைக்கூட்டத்தையும்,) கடகத்தையும் (கடகம் Cuttack என்னுந் தலைநகரையும்) போரில் இழந்தோடினன்; அங்ஙனம் இழக்கும்படி செய்த உன் பிரதாபத்தை அறிந்த அவன் மகளும், பெருவீரனான உன்னை யடைய விரும்பியதனால் உண்டாய தன் உடன்மெலிவால், தானும் கலிங்கத்தையும் (அரையாடையையும்) நுதிக்கைச் சங்கத்தையும் (முன்கையில் அணிந்த வளைகளையும்), கடகத்தையும் (தோள்வளையையும்) நழுவ விடலானாள் என்று புலவர் சமத்காரமாகக் கூறுமழகு அறிந்து மகிழத்தக்கது. இப்பாட்டாலும் இதுபாடிய புலவர் பெயராலும் இவர் அதிபாலியத்திலே ஆசுகவி பாடவல்ல பெரும் புலவராயிருந்தனர் என்பதும், அது பற்றிக் கிருஷ்ணதேவராற் பெரிதும் அபிமானிக்கப் பெற்று, சென்ற இடமெல்லாம் உடனிருந்து அவராஸ்தானத்தை அலங்கரித்தவர் என்பதும், நன்கு புலப்படக் கூடியன. இவற்றால், இராயர்பெருமானுக்குத் தமிழ்மக்களிடம் இருந்த அபிமானமிகுதி நன்கு விளங்கும். ஆகவே கிருஷ்ணதேவராயர், அரிதாசர்போன்ற திருமாலடியாராயும் புலவராயும் விளங்கிய பெரியாரிடம் பத்தியும் பெருமதிப்பும் வைத்திருந்ததற்குத் தக்ககாரணங்கள் உள்ளன என்றே சொல்லலாம்.

மு. இராகவையங்கார்.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு
சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(16-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி ஊர்த்துவபுண்ட்ரதாரணம் நிரூபிக்கப்படுகிறது. ஊர்த்துவபுண்ட்ரத்துக்கு த்ரவ்யம் "விஷ்ணோராயதநஸ்தயா க்ஷேத்ரே வல்மீகாதௌ ப்ரஶஸ்தயா ம்ருதோர்த்வம் வர்ணம்" விஷ்ணோருக்ருதயாக்ஷேத்ரே பர்வதாதௌ ப்ரசஸ்தயா ம்ருதோர்த்துவபுண்ட்ரம்" என்றும், சுவேதம்ருத்திகோபநிஷத்தில் சுவேதம்ருத்திகையே சிறந்ததென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த புண்ட்ரம் ஹரிபாதாகிருதியாகவும், நடுவில் அந்தராளமுடையதாகவும் அடியில் பாதத்தோடே கூடியதாகவும் தரிக்கக் கடவன். இவைகளுக்கு ப்ரமாணம்: ஆதர்வணத்தில், "ஹரே: பாதாக்ருதிம் ஆத்மநோ ஹிதாய மத்யேச்சித்ரம் ஊர்த்வபுண்ட்ரம் யோ தாரயதி ஸ பரஸ்ய ப்ரியோ பவதி" "ஹரே: பாதாக்ருதிம் ஆத்மனோஹிதாய மத்யேச்சித்ரம் ஊர்த்துவபுண்ட்ரம் யோ தாரயதி ஸபரஸ்ய ப்ரியோபவதி" என்றும், "அத ப்ரதிபத்ய நாரதோ ப்ரஹ்மாணமந்வயுங்க்த" "அத ப்ரதிபத்ய நாரதோப்ருஹ்மாணமந்வயுங்க" என்று ஆரம்பித்து, "தத்ரஹிதம் கர்ம விபலம் ரக்ஷாம்ஸி க்ருஹ்ணீயு:" "தத்ரஹிதம் கர்ம விபலம் ரக்ஷாம்ஸி க்ருஹ்ணீயு:" என்றும், இதற்கு அநந்தரம், "ததேவம் ஸம்ஸ்க்ருதம் பவதி நாஸாதி கேஶாந்தம் ஊர்த்வவர்ணம் விஷ்ணோஸ்திஷ்டத்ஸ்வர்ணபாதாக்ருதிம் மத்யம் ஸகாம் பாதயோரஸ்து ஶ்வேதம் தத்ர ஸ்வவந்து தேவாவைதேவ ஸ்தாவகா ஸோ ஸம்ஸ்காரா: ஸர்வே ப்ரதிஷ்டாப்யே ஸ்ரீஹரிஸ்ரீ:" ததேவம்

அப்யுக்தம் பவதி நாசாதி கேசாந்தம் ஊர்த்துவபுண்டரம் விஷ்ணோ ஸ்திதஸ்ய சரண த்வயாக்ருதிம் ஏகாங்குல பாததரோஸ்து மூலே ததுத்பந்நே த்வேசாகேததைவ மத்யாவகாசோ அங்குளாதந்யூந: ஸஸ்ரீப்ரதிஷ்டாயை ஸ்ரீர்ஹரித்ரா" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதற்கு அர்த்தம்:— எம்பெருமானுடைய திருவடி போன்ற நடுவில் அந்தராளமுள்ள ஊர்த்துவபுண்ட்ரத்தை யாவனொருவன் தரிக்கிறானோ அவன் பரனுக்குப் பிரியனானவன் என்றும், நாரதர் நமஸ்கரித்து ப்ரஹ்மாவை வினவுகிறார் என்று தொடங்கி, ஊர்த்துவபுண்ட்ரமில்லாதவன் செய்த கர்மம், நிஷ்பலம்; ராக்ஷஸர்கள் பறித்துக்கொள்வார்கள்; என்றுசொல்லிவிட்டு, நாஸம்முதல் கேசம் வரை, நின்றுகொண்டிருக்கிற விஷ்ணுவினுடைய இரண்டு திருவடிகள் போன்ற ஆகாரத்தையுடையதென்றும், ஓரங்குலமுள்ள பாதமாகிற அடிமரத்திலுண்டான இரண்டு கிளைகள் போன்றதென்றும், நடுவில் அந்தராளம் ஓரங்குலத்துக்குக் குறையாமலிருக்கவேண்டுமென்றும், அவ்விடத்தில் லக்ஷ்மியினுடைய ப்ரதிஷ்டையின் பொருட்டு ஸ்ரீ சூர்ணத்தைத் தரிக்கவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

அப்படியே பராசரஸம்ஹிதையில், "[illegible]" "நாஸாதௌ த்வ்யங்குலம் பாதம் மத்யம் ஸார்த்தாங்குலம் ந்யஸேத், பார்சுவமங்குலமாத்ரந்து ஸுஸ்பஷ்டம் தாரயேத்விஜ:" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு அர்த்தம், நாஸையினுடைய அடியில் இரண்டங்குலமுள்ள பாதத்தை தரிக்கக்கடவன்; நெற்றி நடுவில் அந்தராளம் ஒன்றரை யங்குலமிருக்கவேண்டும்; பார்சுவங்களில் ஒரு அங்குல அகலமிருக்கவேண்டும்; இப்படி ஸ்பஷ்டமாக தரிக்கக் கடவன் என்று சொல்லப்படும். மற்ற இடத்திலும், "[illegible]" "கூர்ச்சமத்யே விகேத்பாதம்" என்று சொல்லப்படுகிறது. கூர்ச்சமாவது புருவங்களுடைய மத்திய பாகம்.

தீபாகிருதி யென்றும், கூர்ம்மாகிருதி என்றும், வேணுபத்ராகிருதி யென்றும், ஹரிபாதாகிருதியென்றும், சொல்லப்பட்டவைகளில் ஹரிபாதாகிருதியான புண்ட்ரமே ப்ரசஸ்தமென்று சொல்லப்பட்டிருக்கிறது; அந்த ஹரிபாதாகிருதி யென்றது பாதத்வயாகிருதி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"நாஸாதௌ த்வ்யங்குலம் பாதம்" "நாஸாதௌ த்வ்யங்குலம் பாதம்" என்கிற வசனத்தாலே பாதத்வபாகிருதியான புண்ட்ரத்திற்கு பீடஸ்தாநீயமான பாதம் நாஸாமூலத்திலிருக்கவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. சில பிரமாணங்களில் பாதவிதாநம் பாதத்வயாகாரம் சொல்லப்படாமலிருந்தபோதிலும் 'அநுக்தம் அந்யதோக்ராஹ்யம்' என்கிற ந்யாயத்தாலும், குணோபஸம்ஹாரந்யாயத்தாலும் பாத ஸஹிதமாய் பாதத்வயாகிருதியான புண்ட்ரமே தார்யமென்று ஏற்படுகிறது.

மேலும் ப்ராசீனங்களான திவ்யதேசங்களிலும் முதலியாண்டான் குமாரரான கந்தாடையண்ணனாலே பிரதிஷ்டிதமான பாஷ்யகாரருடைய அர்ச்சாவிக்ரஹத்தின் லலாடபாகத்திலும், இந்த புண்ட்ரமே ஏற்பட்டிருக்கிறது.

ஸச்சரித்ரரக்ஷையிலும் தேசிகன் ஹரிபாதாகிருதியான புண்ட்ரமே ப்ரசஸ்தமென்றும், "நாஸிகாமூலமாரப்ய" "நாஸிகாமூலமாரப்ய" என்று, அந்த புண்ட்ரமும் நாஸிகாமூலம்முதலிருக்கவேண்டுமென்றும் அருளிச்செய்திருக்கிறார். ஆகையால் பாத ஸஹித ஹரிபாதாகிருதி புண்ட்ரம் ப்ரசஸ்தமென்று ஏற்படுகிறது.

மற்ற புண்ட்ரங்களுக்கும் ப்ரமாணங்களிருக்குமானால் யதா ஸம்ப்ரதாயம் அந்தந்த புண்ட்ரதாரணம் அநுஷ்டேயம். அந்த புண்ட்ரங்களாவது த்வாதசபுண்ட்ரங்களென்றும் த்ரயோதச புண்ட்ரங்களென்றும் பக்ஷத்வயமிருக்கிறது. அவைகளில் த்வாதச புண்ட்ரதாரணமே ப்ரசஸ்தமென்று ஸச்சரித்ரரக்ஷயில் ஏற்படுகிறது. அப்படியிருந்துள்ள த்வாதசபுண்ட்ரதாரணம் பரமேகாந்திகளுக்கு ஆவசியகம். அநுகல்பமாக லலாடபுண்ட்ரதாரணமும், பின்புறத்தில் புண்ட்ரதாரணமும் சொல்லப்பட்டிருக்கிறது.

"𑌲𑌲𑌾𑌟𑍇 𑌕𑍇𑌶𑌵𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍" 'லலாடே கேசவம் த்யாயேத' என்கிற ப்ரமாணப்படி, அந்தந்த புண்ட்ரங்களில் கேசவாதி த்வாதசமூர்த்திகளையும் அம்ருதோத்பவாதிதேவி விசிஷ்டங்களாக த்யானம் பண்ணவேணும். அந்தராளத்தில் ஸ்ரீசூர்ணதாரணம் ஆவசியகம்.

இவைகளுக்கு ப்ரமாணம், பாத்மத்தில் உத்தரகண்டத்தில், "𑌏𑌵𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌾𑌣𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌧𑌰𑍇𑌤𑍍" "எவம் த்வாதசபுண்ட்ராணி ப்ராஹ்மண: ஸததம் தரேத்" என்றும் "𑌤𑌤𑍍 𑌤𑌤𑍍 𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑍇𑌷𑍁 𑌤𑌨𑍍𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌂 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍, 𑌅𑌨𑍍𑌤𑌰𑌾𑌲𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌹𑌰𑌿𑌦𑍍𑌰𑌾𑌂 𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑍍" "தத்தத் புண்ட்ரேஷு தந்மூர்த்திம் த்யாத்வா மந்த்ரேண தாரயேத், அந்தராளேஷு ஸர்வேஷு ஹரித்ரம் தாரயேத் ஸ்ரீயம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இனி ஸர்வேசுவரனையும் ஆசார்யன் பாகவதாள் இவர்களையும் தினந்தோறும் தெண்டம் ஸமர்ப்பிக்கிறதும் பரமைகாந்திகளுக்கும் ஆவசியகம். அது ஸகிருத்தாகவும் அஸகிருத்தாகவும் அநுஷ்டிக்கப்படுகிறது. இதில் ஸகிருத் வந்தனத்துக்கு ப்ரமாணம் நிரூபிக்கப்படும்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸாரம்.

(20-ம் பக்கத்தொடர்ச்சி.)

இங்ஙனம் வேதாந்ததேசிகன் நிஷ்க்ருஷ்டஸம்பந்தஜ்ஞானமில்லாதாரை நோக்கி உபதேசித்தார் என்ற கருத்தைபறியாது நிஷ்க்ருஷ்டஜ்ஞானம் வந்தபிறகும் 'முமுக்ஷுக்காக விதித்திருக்கும் சாதநாநுஷ்டங்களைச் செய்யக்கடவன்' என்ற உபதேசத்தைக் கொண்டு சாதநாநுஷ்டாநம் செய்யத்தக்கது என்று கலங்கினுல் செய்வதென்னென்னில்; 'சாதநாநுஷ்டாநம் செய்யத்தக்கது' என்ற

உபதேசம் நம்முடைய கோஷ்டிக்காகவன்று; நம்முடைய கோஷ்டி இத்தன்மையது என்று நம்முடைய கோஷ்டிக்குண்டான நெடு வாசியை எடுத்துக்காட்டிய பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தியைக்கொண்டு தெளிவாக அறியலாம். அது வருமாறு:—

திருமங்கைமன்னன் திருத்தாயார் கூற்றாக அருளிச்செய்த "கல்லெடுத்துக் கல்மாரிகாத்தாய்" என்ற திருநெடுந்தாண்டகப் பாசுர வ்யாக்யான அவசரத்தில் 'கல்லெடுத்து' என்ற பதத்திற்கு நயமுரைக்கவந்தவிடத்தில் "...... 'கிட்டுவதும் அநுபவிப்பதும் பெறுவதும் ஈசுவரசக்தியாலே' என்றிருக்குமவளிறே. அசக்தாதிகாரமிது, சக்தாதிகாரம் ஸாதநாந்தரங்கள் என்கிற வார்த்தைகள் நம்மாசார்யர்கள் கோஷ்டியிலே புகுரக்கடவதன்றியேயிறேயிருப்பது. 'சக்தரோடு அசக்தரோடு வாசியில்லை ஈசுவரசக்தியைக்கொண்டு தலைசெருக்கைக்கு' என்றிருக்கும் கோஷ்டியிறே. "ஶீதோ பவ ஹநூமத:" "ஶீதோபவ ஹநூமத:" என்கிறசக்தி ஸ்வாச்ரயத்திலே கிடக்க, "ந ராவணஸஹஸ்ரம் மே யுத்தே ப்ரதிபலம் பவேத்" "ந ராவணஸஹஸ்ரம் மே யுத்தே ப்ரதிபலம் பவேத்" என்கிற சக்தியுடையவன் ஸஹகாரியாகத் தனக்கோராற்றாமை அதிசயித்திருக்க "தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்" "தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்" என்றிறே ப்ரதமாசார்யையான பிராட்டியிருந்தது" என்பதாம்.

இனி, இந்த வ்யாக்யானத்திலுள்ள விஷயங்கள் ஆராய்ந்துரைக்கப்படும். 'கிட்டுவதும் அநுபவிப்பதும் பெறுவதும் ஈசுவரசக்தியாலே' என்றது ஈசுவரனுடைய சக்தியை நினைத்து அத்தாலே பேறென்றிருப்பதை உணர்த்தியவாறு. இது, * 'கல்லெடுத்து' என்ற பதத்தை நோக்கி அருளிச்செய்ததாகும். 'அசக்தாதிகாரமிது, சக்தாதிகாரம் ஸாதநாந்தரங்கள் என்கிற வார்த்தைகள் நம்மாசார்யர்கள் கோஷ்டியிலே புகுரக்கடவதன்றியேயிறே யிருப்பது'

---

* " 'கன்மாரி' என்கையாலே கல்லையெடுத்து ரக்ஷித்தான். நீர்மாரியாகில் கடலையெடுத்து ரக்ஷிக்குங்காணும்; என்று பட்டருளிச்செய்வர். இத்தால் 'இன்னதைக்கொண்டு இன்னகார்யஞ் செய்யக்கடவோம்' என்னும் நியதியில்லை; ஸர்வசக்தனென்கை."

என்றது 'அவன் கையார்த்திருப்பது அசக்தர்க்குரிய செயலாம்; சக்தராயிருப்பார் ஸாதநாந்தரங்களை அநுஷ்டித்தே பலத்தைப் பெற வேண்டும்,' என்று வைதிககோஷ்டியில் வழங்கும் வழக்காலுண்டாகின்ற ஸம்சயத்தை யகற்றியவாறு. இங்கு, 'நம்மாசார்ய கோஷ்டியில் புகுரக்கடவதன்றியிறே யிருப்பது' என்று சிறப்பித்துணர்த்தியதனால் 'அசக்தராயிருப்பார் அவன் கை பார்த்திருத்தல்வேண்டும்; சக்தராயிருப்பார் ஸாதநாந்தரங்களை அநுஷ்டித்தேயாகவேண்டும்' என்றுரைக்கின்ற கோஷ்டி யொன்றுண்டென்பதும், அக்கோஷ்டியோடு நமக்கந்வயமில்லையென்பதும் வெளியாகின்றன. மேலும், அக்கோஷ்டிக்கும் நமது கோஷ்டிக்குமுள்ள வேறுவாசியை அருளிச்செய்வார் 'சக்தரோடு அசக்தரோடு வாசியில்லை; ஈசுவர சக்தியைக் கொண்டு தலையெடுக்கைக்கு என்றிருக்கும் கோஷ்டியிறே' என்றார். இதனால், உபதேஷ்டாக்களுடைய கோஷ்டி இரண்டுண்டென்பது பெறப்படுகிறது. இவ்விரண்டு கோஷ்டிகளுள் ஓராண்வழி க்ரமத்திற்குப் பொருத்தமுற்று வருவதெதுவோ? அதுவே ப்ராமாணிகர்கட்கு உபஜீவ்யமாகும் என்பதை விளக்குவார்," 'சீதோபவ ஹநூமத:' என்கிற சக்தி ஸ்வாச்ரயத்திலே கிடக்க....'தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்' என்றிறே ப்ரதமாசார்யையான பிராட்டியிருந்தது" என்றருளிச்செய்தார். ஆக சக்தரோடு அசக்தரோடு வாசியற அவன் கை பார்த்திருப்பதே ஸித்தாந்தத்தின் ஸாரமெனக் கொள்ளத்தட்டில்லை. புறம்பே சிலவற்றை விதித்தனவெல்லாம சில அதிகாரிகளுக்கு அச்ரத்தையை யொழிப்பதற்குத் தோன்றினவேயன்றி வேறில்லை. இதுவேதான் ஸகலசாஸ்த்ரங்களின் பரமதாத்பர்யமாமென்று பரீக்ஷித்துக்குச் சுகப்ரஹ்மருஷி உபதேசிக்கிறார். இதை மாத்திரம் இங்கெடுத்துரைத்துத் தொடங்கிய விஷயத்தை முடித்துவிடுகிறேன்.

(தொடரும்.)

காரப்பங்காடு, ஸ்ரீ. உ. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமியின்,
தமையனார் குமாரரும், அந்தேவாசியுமான
வேங்கடாசார்யர், சேரன்குளம்.

ஸ்ரீ:

நன்கொடை.

நமது திவாகரம் நீடூழிகாலம் நிலைபெற்று விளங்குதற்குப் பல தார்மிகர்கள் சாசுவத நிதியாக உபகரித்து வருகிறமுறையில் கீழே குறிப்பிடப்பெற்றவர்களும் உபகரித்துள்ளார்கள். இன்னும், இவர்கள் தம்மாலியன்றவரையிற் சிலரை நமது திவாகரத்திற்குச் சாசுவதசந்தாதார்களாகச் சேர்ப்பிக்கப் பிரார்த்திக்கப்படுகிறார்கள். இவர்கள் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடு சகலசம்பத்தையும் பெற்று நீடூழிகாலம் வாழுமாறு ஸர்வசக்தியுடைய எம்பெருமானைப் பிரார்த்திப்போமாக.

போஷகர்.

வா. சாரங்கபாணிராமாநுஜதாஸரவர்கள் ரூ 50—0—0.

(மேலப்பட்டிக்கிராமம், திருமங்கலம் தாலூகா).

ஜீவிதசந்தாதார்.

பி. கோபாலஸ்வாமி நாயுடவர்கள் அண்டேசன் ரூ 25-0-0

(ஆபரணக்கல் வியாபாரம் ஆலந்தூர் போஸ்டு, பரங்கிமலை.)

ஸ்ரீவானமாமலை கலியன்ராமாநுஜகூடத்தின்
எக்ஸிக்யூடரும், வால்காட் பிரதர்ஸ்
ஹெட் கிளார்க்குமாகிய (தூத்துக்குடி)
ஸ்ரீமாந், கோபாலகிருஷ்ணப்பிள்ளை
யவர்கள் ரூ 25—0—0.

ப. அ.